# 6 பிறருக்கு உதவுவோம்

## செய பாடு 1

**படததை அவதானிபபோம. கல துரையாடுவோம.**









**பொருததமான படததைத தெரிவு செயது அதன இலககததை இடுவோம.**

1. *பிச்சைக்காரருக்கு உணவு கொடுக்கிறார்கள்.*
2. *பாதையைக் கடக்க உதவுகிறார்கள்.*
3. *கண் தெரியாதவருக்கு உதவுகிறாள்.*

**செய பாடு 2** (17)

**ஆசிரியரின உதவியுடன பின்வரும் உரையாடலைச் செவிமடுபபோம. விடை எழுதுவோம. வாசிபபோம.**



● கீதா ■ ஜனனி ⬟ தாத்தா

■ கீதா, அங்கே பார்.

● ஜனனி, அந்தத் தாத்தா வழி தெரியாமல் இருக்கிறார்.

■ கீதா, அவருக்கு உதவிசெய்வோம்.

● சரி, போவோம்.

■ தாத்தா, நீங்கள் என்ன தேடுகின்றீர்கள்?

⬟ நான் வங்கியைத் தேடுகின்றேன்.

■ எந்த வங்கி?

⬟ மக்கள் வங்கி.

■ வாருங்கள். நாங்கள் காட்டுகின்றோம்.

⬟ மிக்க நன்றி. எனக்கு சரியாகக் கண் தெரியாது.

● கையைப்பிடித்துக் கொள்ளுங்கள். தாத்தா எங்களுடன் வாருங்கள்.

⬟ சரி, போவோம்.

- இதோ வங்கி. உங்களுக்கு என்ன செய்ய வேணும்? தாத்தா?
- எனக்கு வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்க வேணும்.
- அப்ப... விண்ணப்பப்படிவம் ஒன்று நிரப்ப வேணும்.
- எனக்கு நிரப்ப முடியாது அம்மா!
- நாங்கள் நிரப்பித் தருகிறோம் தாத்தா.
- சரி நிரப்பித் தாருங்கள்.
- தாத்தா உங்களுடைய விபரங்கள் வேணும். தேசிய அடையாள அட்டையைத் தாருங்கள்.
- இதோ தேசிய அடையாள அட்டை.
- இதில் கையொப்பம் வையுங்கள்.
- தாத்தா வாருங்கள். விண்ணப்பப்படிவத்தை அதிகாரியிடம் கொடுப்போம்.
- மிக்க நன்றி பிள்ளைகள்.

## சொல்அறிமுகம்

உதவி செய்வோம் - උදවු කරමු

தேடுகிறீர்கள் - සොයන්නේ

கண் தெரியாது - ඇස් පෙනෙන්නේ නෑ

வங்கிக் கணக்கு - බැංකු ගිණුම

விண்ணப்பப்படிவம் - අයදුම්පත්‍රය

நிரப்பித் தாருங்கள் - පුරවා දෙන්න

தேசிய அடையாள அட்டை - ජාතික හැඳුනුම්පත

கையொப்பம் - අත්සන

அதிகாரி - නිලධාරි

## செய பாடு 3

உரையாடலைப் பாத்திரமேற்று வாசிப்போம். நடிப்போம்.

## செய பாடு 4

17

**பின்வரும் கூற்றுகள் சரியாயின் (✓)எனவும் பிழையாயின் (✗) எனவும அடையாளமிடுவோம.**

1. தாத்தா வழி தெரியாமல் தடுமாறுகிறார்.
2. தாத்தா தபால் நிலையத்தைத் தேடினார்.
3. தாத்தாவுக்கு நன்றாகக் கண் தெரியும்.
4. ஜனனியும் கீதாவும் தாத்தாவுக்கு உதவினார்கள்.
5. தாத்தா வங்கிக் கணக்கொன்றைத் திறந்தார்.

## செய பாடு 5

**சோடிகளாக இணைவோம. உதாரணததை அவதானிபபோம. வினா எழுபபுவோம. விடை அளிபபோம.**

**உதாரணம**


உங்களுக்கு உதவி செய்ய வேணுமா?
ஆம். தயவுசெய்து பேனையைத் தாருங்கள்.

1. தயவுசெய்து ஆசனத்தைத் தாருங்கள்.
2. தயவுசெய்து புத்தகத்தைத் தாருங்கள்.
3. தயவுசெய்து பேனையைத் தாருங்கள்.
4. தயவுசெய்து நேரத்தைக் கூறுங்கள்.
5. தயவுசெய்து பணம் தாருங்கள்.
6. தயவு செய்து தொலைபேசியைத் தாருங்கள்.

## செய  பாடு 6

**அடையாள அடடையைப பயனபடுததி; விணணபபப படிவததை நிரபபுவோம.**




1. முழுப்பெயர் :- ____________________

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ____________________

3. விலாசம் :- ____________________

4. பிறந்த திகதி :- ____________________

5. பால் :- ____________________

6. தேசிய அடையாள அட்டை இல :- ____________________

## செய பாடு 7

**உங்கள் நண்பன்/ நண்பி பாடசாலையில் உள்ள நூலகத்தில் அங்கத்துவம் பெறஉள்ளார். அவருக்குப் பின்வரும் படிவத்தைப் பூர்த்தி செய்ய உதவுவோம்.**

### அ க துவப படிவ

1. முழுப் பெயர் :- ______________________
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ______________________
3. முகவரி :- ______________________
4. பிறந்த திகதி :- ____________ வயது :- ____________
5. கற்கும் தரம் :- ______________________
6. வகுப்பாசிரியர் பெயர் :- ______________________
7. தந்தையின் பெயர் :- ______________________
8. தொலைபேசி இலக்கம் :- ______________________

மேற்படி விபரங்கள் உண்மையானதென உறுதிப்படுத்துகின்றேன்.

________________ ________________

திகதி கையொப்பம்

## செய  பாடு 8

**உதாரணததை அவதானிபபோம. கல  துரையாடுவோம.**

1. அ) நான் (தேடு + கின்ற் + ஏன்) தேடுகின்றேன்.
   ஆ) நாங்கள் (தேடு + கின்ற் + ஓம்) தேடுகின்றோம்.

2. அ) நீ (தேடு + கின்ற் + ஆய்) தேடுகின்றாய்.
   ஆ) நீங்கள் (தேடு + கின்ற் + ஈர்கள்) தேடுகின்றீர்கள்.

3. அ) அவன் (தேடு + கின்ற் + ஆன்) தேடுகின்றான்.
   ஆ) அவள் (தேடு + கின்ற் + ஆள்) தேடுகின்றாள்.
   இ) அவர் (தேடு + கின்ற் + ஆர்) தேடுகின்றார்.
   ஈ) அவர்கள் (தேடு + கின்ற் + ஆர்கள்) தேடுகின்றார்கள்.

## செய  பாடு 9

**இடைவெளி நிரபபுவோம.**

உ-ம் - நான் (நிரப்பு + கின்ற் + ஏன்)  நிரப்புகின்றேன்

| | | |
|---|---|---|
| நாங்கள் | ______________________ | ______________________ |
| நீ | ______________________ | ______________________ |
| நீங்கள் | ______________________ | ______________________ |
| அவன் | ______________________ | ______________________ |
| அவள் | ______________________ | ______________________ |
| அவர் | ______________________ | ______________________ |
| அவர்கள் | ______________________ | ______________________ |

## செய பாடு 10

**இடைவெளி நிரபபுவோம.**

| | |
|---|---|
| நாங்கள் | போகின்றோம் |
| ________ | போகின்றீர்கள் |
| ________ | போகின்றான் |
| ________ | போகின்றேன் |
| ________ | போகின்றார்கள் |
| ________ | போகின்றாள் |
| ________ | போகின்றீர் |
| ________ | போகின்றார் |

## செய பாடு 11

**பின்வரும் உதாரணத்தை அவதானிப்போம். கலந்துரையாடுவோம.**

| | | |
|---|---|---|
| 1. | நான் | (வை + க்கின்ற் + ஏன்) வைக்கின்றேன். |
| | நாம் | (வை + க்கின்ற் + ஓம்) வைக்கின்றோம். |
| | நீ | (வை + க்கின்ற் + ஆய்) வைக்கின்றாய். |
| | நீங்கள் | (வை + க்கின்ற + ஈர்கள்) வைக்கின்றீர்கள். |
| | அவன் | (வை + க்கின்ற் + ஆன்) வைக்கின்றான். |
| | அவள் | (வை + க்கின்ற் + ஆள்) வைக்கின்றாள். |
| | அவர் | (வை + க்கின்ற் + ஆர்) வைக்கின்றார். |
| | அவர்கள் | (வை + க்கின்ற் + ஆர்கள்) வைக்கின்றார்கள். |

## செய பாடு 12

### இடைவெளி நிரபபுவோம.

| | |
|---|---|
| நான் | வாசிக்கின்றேன் |
| நாங்கள் | |
| | வாசிக்கின்றார்கள் |
| அவள் | |
| நீ | |
| | வாசிக்கின்றீர்கள் |
| | வாசிக்கின்றார் |
| | வாசிக்கின்றான் |

## செய பாடு 13

**சோடிகளாக இணைவோம். A பகுதியில் உள்ள சொற்களைப் பயனபடுததி பொருததமான வினா எழுபபுவோம். B பகுதியில் உள்ள சொற்களைப் பயனபடுததி விடையளிபபோம்.**

| A | B |
|---|---|
| காலையில் - උදේ | போ |
| பின்னேரம் - සවස | விளையாடு |
| நாளைக்கு - හෙට | படி |
| நாளை மறுதினம் - අනිද්දා | சாப்பிடு |
| அடுத்த மாதம் - ලබන මාසය | குடி |
| அடுத்த வருடம் - ලබන අවුරුද්ද | வாசி |
| அடுத்த கிழமை - ලබන සතිය | எழுது |
| | ஓடு |

**உதாரணம :-**

- நீங்கள் காலையில் என்ன செய்வீர்கள்?
- நான் தமிழ் வகுப்புக்குப் போவேன்.

- நீங்கள் பின்னேரம் என்ன செய்வீர்கள்?
- நான் விளையாடுவேன்.

## செயல்பாடு 14

மூவர் கொண்ட குழுக்களாக பிரிவோம். A, B அட்டவணைகளை அவதானிப்போம். அட்டவணை A இல் உள்ள சொற்களில் ஒன்றை ஒருவர் கூற வேண்டும். B இல் உள்ள வினையடியை இன்னுமொருவர் கூற வேண்டும். மூன்றாமவர் அவை இரண்டையும் வைத்து நிகழ்கால வாக்கியம் ஒன்றைக் கூற வேண்டும்.

| A | B |
|---|---|
| நான் | நிரப்பு |
| நாங்கள் | எழுது |
| நீ | வை |
| நீங்கள் | படி |
| அவன் | குடி |
| அவள் | வாசி |
| அவர் | தேடி |
| அவர்கள் | ஓடு |

உதாரணம் -

1. ▲ நான்
2. ■ நிரப்பு
3. ● நான் நிரப்புகின்றேன்



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



18

வழி

வங்கி

கணக்கு

ஆரம்பிக்க

விபரங்கள்

விண்ணப்பப்படிவம்

கையொப்பம்

அதிகாரி

தேசிய அடையாள அட்டை



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍යයි |
| 1. අයදුම් පත්‍රයක් සම්පූර්ණ කිරීම | | | |
| 2. උක්තයට අනුව ආඛ්‍යාතය තැබීම | | | |
| 3. දෙමළ බසින් කරන ඉල්ලීමක් තේරුම් ගැනීම | | | |
| 4. මෙම පාඩමේ යෙදෙන වචනවලට සවන් දී නිවැරදි ව උච්චාරණය කිරීම | | | |